**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.11/2025 தேதி- 17.04.2026
(PW.) – பெர்குலின் சரண்

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1. இவ்வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஸ்டிபன் என்பவர் ராஜகுமாரனுக்கு எழுதிக்கொடுத்த விலை ஆவணத்தை ரத்து செய்ய கோரி பரிகாரம் கேட்டுள்ளேன். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண். 617/3A ஆகும். சர்வே எண். 617/2 க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 617/2 க்கும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு விவரங்களை யார் சொல்லிகொடுத்தார்கள் என்றால் நான் தான் சொல்லிகொடுத்தேன். சர்வே எண். 617/2, சர்வே எண். 617/3 இவ்வழக்கை நான் தாக்கல் செய்த முன்பே உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண். 617/2B, என்பது சர்வே எண். 617/2B1, சர்வே எண். 617/2B2 என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. சர்வே எண். 617/3,சர்வே எண். 617/3B1, சர்வே எண். 617/3B2 உட்பிரிவு செய்யபட்டது என்றால் அதுபற்றி தெரியாது.

2. சர்வே எண். 617/2B2, சர்வே எண். 617/3B2 பொருத்து நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும வா.சா.ஆ 1 ஆவணம் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணம் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-2 ஆவணத்தில் றீசர்வே எண்.617/3 ல் உள்ள சொத்தை பொருத்து நடந்த வழக்கு சம்மந்தமான இறுதி நிலை தீர்ப்பாணை என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).